பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

**17 12 2025** **7 15**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க தற்காலக் கல்வி முறையை, புதுமைக் கண்டுபிடிப்புகளுடன் ஒருங்கிணைப்பது அவசியம் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

**2.** காசநோயால் ஏற்படும் உயிரிழப்பு **25** சதவீதம் குறைந்துள்ளதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு.ஜெ.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

**3.** சைக்கிள் ஓட்டுவது உடல் தகுதிக்கான மிகச்சிறந்த பயிற்சியாக உருவெடுத்துள்ளது என்று மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

**4.** ஈரான் மற்றும் பாகிஸ்தானில் இருந்து ஒரேநாளில் **3** ஆயிரம் ஆஃகானிஸ்தான் அகதிகள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

**5.** தேசிய துப்பாக்கி சுடும் சாம்பியன் போட்டியில் **Aishwary Pratap Singh Tomar** தங்கப் பதக்கம் வென்று உலக சாதனை படைத்துள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க தற்காலக் கல்வி முறையை புதுமைக் கண்டுபிடிப்புகள் மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்புணர்வுடன் ஒருங்கிணைப்பது அவசியம் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

கர்நாடக மாநிலம் **Malavalli-**யில் ஆதி ஜெகத்குரு சிவராத்திரீஸ்வரா சிவயோகி மஹா சுவாமியின் ஆயிரத்து **66**வது ஜெயந்தி விழாவில் பேசிய அவர், இளைஞர்களை பொறுப்புள்ள குடிமக்களாக வளர்த்தெடுக்க ஆன்மிக அமைப்புகள் வழிகாட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஆன்மிகம் மனிதகுலத்தை ஒருங்கிணைப்பதுடன், இரக்கம், சகிப்புத்தன்மை, ஒருவரையொருவர் மதித்து நடந்துகொள்ளுதல் மற்றும் கூட்டுப் பொறுப்புகளை எடுத்துரைப்பதாகவும் குடியரசுத்தலைவர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

நாட்டின் **20** மாநிலங்களில் உள்ள பஞ்சாயத்துராஜ் அமைப்புகளில், சமுதாயம் சார்ந்த பேரிடர் அபாயக் குறைப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்த, **507** கோடி ரூபாய் ஒதுக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

புதுதில்லியில், மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித் ஷா தலைமையில் நடைபெற்ற உயர்மட்டக் குழுக் கூட்டத்தில், தேசிய பேரிடர் குறைப்பு நிதியத்தின் செயல்பாடுகளை, பஞ்சாயத்து அளவில் விரிவுபடுத்த முடிவு செய்யப்பட்டதாக, உள்துறை அமைச்சகத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேரிடர் பாதிப்பு அபாயம் உள்ள **81** மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படும் என்றும், மாநில அரசுகளுக்கு ஏற்கனவே விடுவிக்கப்பட்ட மாநில பேரிடர் நிவாரண நிதியுடன், கூடுதலாக நிதியுதவி வழங்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில், மாநில பேரிடர் நிவாரண நிதியாக, **28** மாநிலங்களுக்கு **16** ஆயிரத்து **118** கோடி ரூபாயும், தேசிய பேரிடர் நிவாரண நிதியாக **18** மாநிலங்களுக்கு **2** ஆயிரத்து **854** கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டிருப்பதாகவும் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

காசநோயால் ஏற்படும் உயிரிழப்பு **25** சதவீதம் குறை

ள்ளதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு.ஜெ.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்துப் பேசிய அவர், காசநோய் ஒழிப்புப் பணியில், தமிழகத்தில் பின்பற்றப்படும் மக்கள் பங்கேற்பு அணுகுமுறைக்கு பாராட்டு தெரிவித்தார்.

இப்பணிக்கு மக்கள் ஆதரவைத் திரட்டுவதிலும், காசநோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு ஆதரவளிப்பதிலும், தமிழகம் சிறந்த அணுகுமுறையைப் பின்பற்றி வருவதாக அவர் கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கும், மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு கூட்டங்களில், காசநோய் ஒழிப்புப் பணிக்கு முன்னுரிமை அளிப்பதோடு, சுகாதார மையங்களைப் பார்வையிட்டு, பாதிக்கப்பட்டவர்களுடன் கலந்துரையாடுமாறும் கேட்டுக்கொண்டார்.

இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான, மாதாந்திர ஊட்டச்சத்து உதவித் தொகை, ஐநூறு ரூபாயிலிருந்து, ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருப்பதாகவும் திரு. ஜெ.பி. நட்டா குறிப்பிட்டார்.

<<<<>>>>

நாட்டில் அதிகரித்து வரும் நகர்ப்புற மக்கள் தொகையைக் கருத்திற்கொண்டு, வீட்டுவசதி உள்ளிட்ட கட்டமைப்புத் திட்டங்களை, குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடிக்க வேண்டியதன் அவசியத்தை, மத்திய வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு.மனோகர் லால் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில், **HUDCO** நிறுவனத்தின் ஆலோசனைக் குழு கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய அவர், வீட்டுவசதித் திட்டங்களுக்குத் தேவையான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதிலும், நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களுக்கான நீண்டகால நிதியுதவியை உறுதி செய்வதிலும், ஹட்கோவின் பங்களிப்பை சுட்டிக்காட்டினார்.

நகரங்கள் விரிவடைந்து வருவதால், நகர்ப்புறங்களின் தேவையும் அதிகரித்து வருவதாகக் கூறிய திரு.மனோகர் லால், எதிர்காலத்திற்கேற்ற கட்டமைப்புத் திட்டங்களுக்கான நிதியுதவி முறைகளை வகுக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தினார்.

<<<<>>>>

சைக்கிள் ஓட்டுவது, உடல் தகுதிக்கான மிகச்சிறந்த மற்றும் எளிதில் மேற்கொள்ளக்கூடிய பயிற்சியாக உருவெடுத்துள்ளது என்று, மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

புதுதில்லியில், புனே கிராண்ட் டூர் சைக்கிள் போட்டிக்கான கோப்பையை வெளியிட்டுப் பேசிய அவர், சைக்கிள் ஓட்டுவது, கட்டுடல் இந்தியா இயக்கத்தின் ஒரு பகுதியாக மாறியுள்ளது என்றார்.

ஞாயிறுதோறும் சைக்கிள் பயணம், இதுவரை 8 ஆயிரத்து 300 இடங்களில் நடத்தப்பட்டிருப்பதையும் டாக்டர் மன்சுக் மாண்டவியா சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>

காற்று மாசுபடுவதைத் தடுக்க, வாகனப் புகை வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தவும், டயர் கழிவுகளை எரிக்கும் சட்டவிரோத தொழிற்சாலைகள் மீதும், கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என, மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.பூபேந்தர் யாதவ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

தில்லி புறநகர்ப் பகுதிகளான குருக்கிராம் மற்றும் பரிதாபாத்தில், காற்று மாசுபடுவதை தடுப்பதற்கான செயல்திட்டம் குறித்த உயர்மட்டக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய அவர், போக்குவரத்து நெரிசல், கிராமப்புற சாலைகள் மோசமான நிலையில் இருப்பது மற்றும் கட்டிட விதிமீறல் போன்றவையே சுற்றுச்சூழல் சீர்கேட்டிற்கு, முக்கியக் காரணமாக உள்ளதை சுட்டிக்காட்டினார்.

நகராட்சிகளின் திடக்கழிவு மற்றும், கட்டட இடிபாடுகளை அகற்றும் திட்டங்களை விரைவுபடுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

காற்றுத் தர கண்காணிப்பு நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதோடு, மாசு தடுப்புப் பணிகளில், மக்கள் பங்கேற்பை அதிகரிக்கச் செய்யுமாறும் திரு.பூபேந்தர் யாதவ் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

ஆயுஷ்மான் பாரத் - பிரதமரின் ஜன் ஆரோக்யா திட்டத்தின் மூலம், 12 கோடிக்கும் அதிகமான குடும்பங்கள் பயனடைந்து வருவதாக, மத்திய சுகாதாரத் துறை இணையமைச்சர் திரு.பிராதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் இதனைத் தெரிவித்த அவர், இத்திட்டத்தின்கீழ், பயனாளி குடும்பங்களுக்கு, ஆண்டுக்கு 5 லட்சம் ரூபாய் வரை, காப்பீடு வசதி வழங்கப்படுவதாக தெரிவித்துள்ளார்.

இதன் மூலம், 27 வகையான குறைபாடுகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுதாகவும், அங்கன்வாடி பணியாளர்கள், சமூக சுகாதார செயற்பாட்டாளர்கள் மற்றும், 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களும் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டிருப்பதாகவும் திரு.பிரதாப் ராவ் ஜாதவ் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

வந்தே பாரத் ரயில்கள் மூலம் இதுவரை ஏழரை கோடிக்கும் அதிகமானோர் பயணம் செய்துள்ளதாக ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கடந்த 2019ஆம் ஆண்டு வந்தே பாரத் ரயில் சேவை தொடங்கப்பட்டதில் இருந்து 164 ரயில்கள் இயக்கப்பட்டு வருவதாக கூறப்பட்டுள்ளது.

நாட்டின் கலாச்சார, ஆன்மிக மற்றும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த 274 மாவட்டங்களை இணைக்கும் வகையில் இந்த ரயில் சேவை நடைபெறுவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஈரான் மற்றும் பாகிஸ்தானில் இருந்து ஒரேநாளில் 3 ஆயிரம் ஆஃகானிஸ்தான் அகதிகள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

577 குடும்பங்களைச் சேர்ந்த இவர்கள் நேற்று முன்தினம் வலுக்கட்டாயமாக திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக தாலிபன் செய்தித்தொடர்பாளர் முல்லா ஹம்துல்லா தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் ஹெராத் பிராந்தியத்தில் உள்ள **Islam Gala** பகுதியைக் கடந்து ஆஃப்கானிஸ்தான் திரும்பியதாகவும் அவர் கூறியுள்ளார்.

இவர்களுக்கு செல்ஃபோனுக்கான சிம் கார்டு உள்ளிட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் முல்லா ஹம்துல்லா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

உலக சுகாதார அமைப்பின் பாரம்பரிய மருத்துவம் குறித்த உலகளாவிய மாநாடு புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

வரும் வெள்ளிக்கிழமை வரை **3** நாள் நடைபெறும் இம்மாநாட்டிற்கு உலக சுகாதார அமைப்பும், மத்திய ஆயுஷ் அமைச்சகமும் கூட்டாக ஏற்பாடு செய்துள்ளன.

இதில் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மருத்துவர்கள், விஞ்ஞானிகள் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

இந்த மாநாட்டில் **25** அமர்வுகளில் **170**க்கும் மேற்பட்ட நிபுணர்கள் பங்கேற்று உரையாற்ற உள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தேசிய துப்பாக்கி சுடும் சாம்பியன் போட்டியில் **Aishwary Pratap Singh Tomar** தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

போபாலில் நேற்று நடைபெற்ற ஆடவர் **50** மீட்டர் ரைஃபிள் பிரிவல் அவர் புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

இப்போட்டியில் நீரஜ் குமார் வெள்ளிப் பதக்கத்தையும், அகில் ஷெரான் வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

--------------

இந்தியா-தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையிலான **4**வது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி லக்னோவில் இன்று நடைபெறுகிறது.

இப்போட்டி இரவு **7** மணிக்கு தொடங்குகிறது.

**5** போட்டிகள் கொண்ட இத்தொடரில் **2-1** என்ற கணக்கில் இந்தியா முன்னிலை பெற்றுள்ளது.

----------------

அடுத்த ஆண்டு நடைபெற உள்ள ட்வெண்ட்டி ட்வெண்ட்டி உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான கோப்பை, ஆசியாவில் உள்ள பல்வேறு நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

ராமேஸ்வரம் அருகே உள்ள ஆதாம் பாலத்தில் இருந்து நேற்று தொடங்கிய இந்தக் கோப்பையின் பயணம், இந்தியாவின் பல்வேறு இடங்களைக் கடந்து, இலங்கை, நேபாளம், கத்தார், ஓமன், பஹ்ரைன், மங்கோலியா நாடுகளுக்கும் செல்கிறது.

**<<<<The End>>>>**